### கோவை மாநகரின் ஆத்துப்பாலம் முதல் உக்கடம் சந்திப்பு ஒப்பணக்கார வீதி வரை உள்ள

# உயர்மட்ட மேம்பாலத்திற்கு 'சி. சுப்பிரமணியம் மேம்பாலம்' என பெயர் சூட்டல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, டிச. 29-

**கோவை மாநகரின் ஆத்துப்பாலம் முதல் உக்கடம் சந்திப்பு ஒப்பணக்கார வீதி வரை உள்ள உயர்மட்ட மேம்பாலத்திற்கு 'சி. சுப்பிரமணியம் மேம்பாலம்' என்று பெயர் சூட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

கொள்கைகளும் பாதைகளும் வெவ்வேறானாலும் மக்களின் நன்மதிப்பைப் பெற்று நாட்டுக்காகப் பணியாற்றிய தலைவர்களைப் போற்றுவதே மாண்பு!

ஒன்றிய அமைச்சராகப் பொறுப்பு வகித்து, நாட்டு மக்களின் பசிப்பிணியைப் போக்கிய பசுமைப் புரட்சிக்கு அடித்தளமாக இருந்தவர் மதிப்பிற்குரிய பாரத ரத்னா சி.சுப்பிரமணியம் அவர்கள்.

அவரது புகழொளியைப் பரப்பிட வேண்டும் என மதிப்பிற்குரிய டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ் வாணவராயர் அவர்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, கோவை மாநகரின் ஆத்துப்பாலம் முதல் உக்கடம் சந்திப்பு ஒப்பணக்கார வீதி வரை உள்ள உயர்மட்ட மேம்பாலத்திற்கு 'சி. சுப்பிர மணியம் மேம்பாலம்' என்று பெயர்சூட்டும் மகிழ்ச்சிகரமான அறிவிப்பை உங்கள் எல்லோருடனும் பகிர்ந்துகொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.



தருமபுரி மேற்கு மாவட்டம், பாப்பிரெட்டுப்பட்டி சட்டமன்றத் தொகுதி, தருமபுரி தெற்கு ஒன்றியம், கிருஷ்ணாபுரம் ஊராட்சி வாக்குச்சாவடி எண். 24 ல் மாவட்டச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் வாக்காளர் பட்டியல் பெயர் சேர்க்கை, நீக்க, திருத்த செய்ய நடைபெறும் சிறப்பு முகாமினை ஆய்வு செய்தார். உடன் மாவட்ட அவைத் தலைவர் கே.மனோகரன், ஒன்றியக் கழகச் செயலாளர் டாக்டர் எம்.பிரபு ராஜசேகர், வாக்குச்சாவடி முகவர் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### மயிலாடுதுறை மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில்

# 120 பயனாளிகளுக்கு ரூ.1.10 கோடியில் நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்! நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. - எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

மயிலாடுதுறை டிச. 29–

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 120 பயனாளிகளுக்கு ரூ.1.10 கோடி

நலத்திட்ட உதவிகளை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்கள்.

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மாற்று திறனாளிகள் நலத்துறை சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது நிகழ்ச்சிக்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ். ஸ்ரீகாந்த் தலைமை தாங்கினார். மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.மாவட்ட வருவாய் அலுவலர் .ஆர்.பூங்கொடி வரவேற்றார்

நிகழ்ச்சியில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 50 பயனாளிகளுக்கு தலா ரூ.1,08,000 வீதம் ரூ.55 இலட்சம் மதிப்பீட்டில் இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களையும், 5 பயனாளிகளுக்கு தலா ரூ.17,000 வீதம் மொத்தம் ரூ.97 ஆயிரம் மதிப்பீட்டில், பார்வை திறன் மற்றும் செவித்திறன் குறைவுடைய மாற்றுத்திறனாளிகளுக்கான செல்போன்களையும், 5 பயனாளிகளுக்கு தலா ரூ.6350 வீதம் ரூ.31 ஆயிரத்து 750 மதிப்பீட்டில் மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்களையும், 4 பயனாளிகளுக்கு தலா ரூ.3250 வீதம் ரூ.13 ஆயிரம் மதிப்பீட்டில் காதுக்கு பின் அணியும் காதொலி கருவிகளையும், 1 பயனாளிக்கு ரூ. 10 ஆயிரத்து 050 மதிப்பீட்டில் மூன்று சக்கர சைக்கிள் என 120 பயனாளிகளுக்கு ரூ.1.10 கோடி மதிப்பில்ஆகியவற்றையும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கி பேசுகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாற்றுத் திறனாளிகள் நலத்துறையினை மிக கவனமாகவும், கண்ணும் கருத்துமாகவும் வைத்து பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். மயிலாடுதுறை மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 50 பயனாளிகளுக்கு ரூ. 55 இலட்சம் மதிப்பீட்டில் இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை வழங்கி இருக்கிறோம். இதன்மூலம் அவர்கள் யாருடைய துணையும் இன்றி தங்களுடைய அன்றாட தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும். மேலும், எந்த இடத்திற்கும் செல்வதற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

கடந்த காலங்களில், மாற்றுத் திறனாளிகளில், இரண்டு கால்களையும் இழந்தவர்களுக்கு மட்டுமே, இதுபோன்ற மூன்று சக்கர மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்டு வந்த நிலையில், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாற்றுத்திறனாளிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, ஒரு கால்;;; இழந்தவர்களுக்கும், இதுபோன்ற இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கலாம் என்று அரசாணையில் திருத்தம் கொண்டு வந்தார். மேலும், ஏற்கனவே மாற்றுத்திறனாளிக்கு ஒரு முறை மட்டுமே இதுபோன்ற மோட்டார் சைக்கிள் வழங்கப்படும் என்ற நிலையினை தளர்த்தி, மூன்று சக்கர மோட்டார் சைக்கிள் வாங்கி 10 ஆண்டுகள் கடந்திருப்பின், அவர் மீண்டும் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறலாம் என அரசாணையில் திருத்தம் கொண்டு வந்தார் நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்;.

மயிலாடுதுறை மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு அரசின் மூலம் இதுவரை 13346 மாற்றுத்திறனாளிகளுக்கு 21 வகையான மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. 20222023 முதல் 20252026 வரையிலான நிதியாண்டிற்கு 2264 மன வளர்ச்சி குன்றியோர், 40 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை உள்ள மாற்றுத்திறனாளிகளில் கை, கால்கள் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளில் மிகவும் கடுமையாக 75 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளில் 696 மாற்றுத்திறனாளிகளுக்கும், 105 தொழுநோயால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு பராமரிப்பு உதவி தொகை வழங்கப்பட்டுள்ளது. 29 முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டோர், தண்டுவட மரப்பு நோய் மாற்றுத்திறனாளிகளில் 20 நபர்களுக்கு என மாவட்டம் முழுவதும் உள்ள 3329 பயனாளிகளுக்கு மாதம் தலா ரூ.2000ஃ வீதம் மொத்தம் ரூ.66 இலட்சத்து 58 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.


20222023 முதல் 2025 2026 வரை சிறு, குறு, நடுத்தர மான மாற்றுத்திறனாளிகள் சுய தொழில் புரிந்து பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்வதற்கு வங்கி கடன் மானியமாக 200 நபர்களுக்கு ரூ.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 2022 2023 முதல் 20252026 ஆம் நிதியாண்டிற்கு 18 வயதிற்கு மேற்பட்ட பார்வைதிறன் மற்றும் செவித்திறன் குறைவுடைய மாற்றுத்திறனாளிகளுக்கு ஸ்மார்ட் செல்போன் வழங்கும் திட்டத்தின்கீழ் ரூ.51 இலட்சத்து 28 ஆயிரம் மதிப்பில் 130 பார்வை திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகள் மற்றும் 182 செவித்திறன் குறைவுடைய மாற்றுத்திறனாளிகள் செல்போன் பெற்று பயனடைந்துள்ளனர். கால்கள் பாதிக்கப்பட்டவர்கள், செவித்திறன் குறைபாடுடையவர்கள். மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளின் தாய் மார்களுக்கு 20222023 முதல் 20252026 வரை மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் 197 பயனாளிகளுக்கு ரூ.12 இலட்சத்து, 91 ஆயிரத்து 680 மதிப்பிலான தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது. 20222023 முதல் 2025 2026 வரை பொது பிரிவு திட்டத்தின்கீழ், 871 மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு ரூ.53 இலட்சத்து 42 ஆயிரத்து 600 மதிப்பிலான கல்வி உதவி தொகை வழங்கப்பட்டுள்ளது. 20222023 முதல் 20252026 வரை இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் 453 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.4 கோடியே 48 இலட்சத்து 42 ஆயிரம் மதிப்பீட்டில் இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கப்பட்டு உள்ளது. 20222023 முதல் 20252026 வரை முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்ட 6 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.6 இலட்சத்து 33 ஆயிரம் மதிப்பீ;டில் பிரத்யேகமான வடிவமைக்கப்பட்ட இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட மதிப்பிலான பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கப்பட்டுள்ளது. முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களுக்கும். தசை திசைவு நோயால் பாதிக்கப்பட்ட 48 நபர்களுக்கு ரூ.50 இலட்சத்து, 88 ஆயிரம் மதிப்பிலான பேட்டரியால் இயங்கும் சிறப்பு சக்கர நாற்காலி வழங்கப்பட்டு உள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாற்றுத்திறனாளிகளின் நலனை கருத்தில் கொண்டு பல்வேறு நல்ல திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். இத்திட்டங்களை மாற்றுத்திறனாளிகள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் இவ்வாறு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்..சிவ.வீ.மெய்யநாதன் பேசினார்.நிகழ்ச்சியில் கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன்,சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எம். எம்.சித்திக்,

தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் இராம. இளங்கோவன் ஜி.என்.ரவி, மாவட்ட கழக துணை செயலாளர் மு. ஞானவேலன், மாவட்ட கழகப் பொருளாளர் மகா.அலெக்சாண்டர், நகர கழக செயலாளர்கள் குண்டாமணி (எ) என். செல்வராஜ், ம. சுப்பராயன், ஒன்றிய கழக செயலாளர்கள் மூவலூர் எம்.மூர்த்தி, மங்கை எம்.சங்கர், எம்.அப்துல் மாலிக், அமிர்த.விஜயகுமார், ஏ.ஜி.ஜெ.பிரபாகர், ஏ.ஆர்.ராஜா, பஞ்சு.குமார், ப. முருகமணி, பொதுக்குழு உறுப்பினர் பி.சிவதாஸ், பேரூர் செயலாளர்கள் எம்.சம்சுதீன், அண்ணாதுரை, ஒன்றிய குழு முன்னாள் தலைவர்கள் தியாக. விக்னேஸ்வரன், மகேந்திரன்,மாவட்ட சார்பாக எம்.கே. மருது, வெடி எஸ்.பாலமுருகன், இரா. மனோகரன், தன்ராஜ், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் பரிதி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், அரசுத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சித்ரா நன்றி கூறினார்.

### வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த முகாம்! பெரம்பலூர் மாவட்ட

# ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் பணியில் ஈடுபட வேண்டும்!

## மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!



பெரம்பலூர். டிச.29 -

பெரம்பலூர் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த முகாமில் கழகத்தினர் முனைப்பாக ஈடுபட வேண்டும் என்று பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் கூறியுள்ளார்.

இது குறித்து பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு, இந்திய தேர்தல் ஆணையத்தால் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு பணிகள் நடைபெற்று, தற்போது வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிக்கு வாக்குச்சாவடிகளில் சிறப்பு முகாம் 27.12 .2025, சனிக்கிழமை, 28.12.2025, ஞாயிற்றுக்கிழமை மற்றும் 03.01.2026, சனிக்கிழமை 04.01.2026, ஞாயிற்றுக்கிழமை ஆகிய தேதிகளில் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தில் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப் பணிக்கு வாக்குச்சாவடி அலுவலர்களால் விண்ணப்பங்கள் பெறப்பட உள்ளது. கழக நிர்வாகிகளுடன் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (பி.எல்.ஏ2), வாக்குச்சாவடி டிஜிட்டல் ஏஜென்டுகள் (பி.டி.ஏ) , வாக்குச் சாவடி (பி.எல்.சி), கிளை உறுப்பினர்கள் நிகழ்ச்சி கிளை, வார்டு செயலாளர்கள், நிர்வாகிகள், கழகத்தினர் வாக்காளர் பட்டியலை மீண்டும் ஒருமுறை சரிபார்த்து வாக்குச் சாவடி சிறப்பு முகாமில் விடுபட்ட வாக்காளர்களையும் புதிதாக சேர்க்க வேண்டிய வாக்காளர்களையும் கழக ஆதரவு வாக்காளர்களையும் சேர்க்க வேண்டும். இறந்த வாக்காளர்கள், நிரந்தரமாக குடி பெயர்ந்த வாக்காளர்கள், போலி வாக்காளர்களை நீக்கிடவும் பெயர், முகவரி திருத்தம் செய்திடவும், உரிய படிவத்தை நிரப்பி வாக்குச்சாவடி அலுவலர்களிடம் வழங்கிட வேண்டும். இந்த பணி சிறப்பாக அமைந்திட ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் உள்ளிட்டவர்களிடம் உரிய அறிவுறுத்தல் வழங்கி 4 நாட்கள் நடைபெறும் சிறப்பு முகாமில் சிறப்பாக பணியாற்றிட வேண்டுமென்றும், இந்த பணியில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், .தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், வாக்குச்சாவடியில் நடைபெற உள்ள வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்பு முகாமில் பங்கேற்று பணியாற்ற வேண்டும். ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த முகாமில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்பட்ட விவரங்களை தலைமை கழகத்திற்கு அனுப்பிடும் வகையில் பெரம்பலூர் மாவட்ட கழகத்திலும் பட்டியலை வழங்கிடுமாறு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு வீ.ஜெகதீசன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### புத்தாநத்தம் ஊராட்சி இரண்டாக பிரிப்பு :

# முதலமைச்சருக்கு, நன்றி தெரிவித்த மக்கள்!

## மாவட்ட கலெக்டரை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்!

திருச்சி டிச.29-

திருச்சி மாவட்டத்தில் உள்ள மணப்பாறை ஒன்றியத்தில் 21 கிராமங்களை உள்ளடக்கிய புத்தாநத்தம் ஊராட்சி அமைந்துள்ளது. இதனை இரண்டாகப் பிரித்து 12 கிராமங்களுடன் இடையபட்டி ஊராட்சி என்ற புதிய ஊராட்சி உருவாக்கப்பட்டுள்ளது இதில் சின்ன கவுண்டம்பட்டி கணவாய் பட்டி, குருமலைப்பட்டி, வடக்கு இடையபட்டி உள்ளிட்ட 12 கிராமங்கள் இந்த புதிய ஊராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ளது.

புத்தாநத்தம் ஊராட்சியை பிரிப்பதற்கு புத்தாநத்தம் சீரமைப்பு சங்கம் உருவாக்கப்பட்டு அதன் ஒருங்கிணைப்பாளராக புத்தாநத்தம் ஜமாத் செயலாளர் எம் கே சாகுல் ஹமீது தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது அந்த குழுவில் கே எஸ் அமானுல்லா, டி ஏ கே சதக்கத்துல்லா, முகமது முபாரக், அன்வர் அலி ராஜ முகமது ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

ஊராட்சியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் மணப்பாறை எம்எல்ஏ அப்துல் சமது, ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் பெரியசாமி, திருச்சி மாவட்ட அமைச்சர்கள் கே என் நேரு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோருக்கு வரைவு திட்டத்தை அனுப்பி கலெக்டருக்கு பரிந்துரை செய்தனர். அதன் அடிப்படையில் தற்போது அந்த ஊராட்சி இரண்டாக பிரிக்கப்பட்டுள்ளது.

இதற்கு தமிழக முதலமைச்சர் மு. க .ஸ்டாலின், அமைச்சர்கள் பெரியசாமி ,கே என் நேரு ,அன்பில் மகேஷ் பொய்யாமொழி,

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தலைவர் காதர் மொகிதீன், எம்பிக்கள் ஜோதிமணி கவிஞர் சல்மா மணப்பாறை எம் எல்ஏ அப்துல் சமது ஆகியோருக்கும் புத்தாநத்தம் ஊராட்சி தலைவர் துணைத் தலைவர், புத்தாநத்தம் கஸ்பா பகுதியில் உள்ள ஆறு வார்டு உறுப்பினர்கள் மற்றும் கிராமப்புற வார்டு உறுப்பினர்கள்,

புத்தாநத்தம் ஜமாஅத் நிர்வாகம், புத்தாநத்தம் கஸ்பா நலச்சங்கம், நூரே அஹமதிய்யா பைத்துல் மால், ஆயத்த ஆடைகள் தயாரிப்பாளர்கள் நலச்சங்கம் மற்றும் கிராம மக்களுக்கு புத்தாநத்தம் ஊராட்சி சீரமைப்பு சங்கம் நன்றி தெரிவித்துள்ளது.

மேலும் புத்தாநத்தம் சீரமைப்பு சங்கத்தின் பொறுப்பாளர்கள் சாகுல் அமீது தலைமையில் கலெக்டர் சரவணனை சந்தித்து தங்களது நன்றியை தெரிவித்தனர்.



இளைஞர் எழுச்சி நாளை முன்னிட்டு கரூர் மாவட்ட கழகம் சார்பில் விளையாட்டு திருவிழா நடைபெற்றது. இந்த வகையில் கரூர் திருவள்ளுவர் மைதானத்தில் கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்றன. வெற்றி பெற்ற வீரர்களுக்கு மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ பரிசுகளை வழங்கினார்.



நாகை மாவட்டம் நாகையில் சுனாமி 21 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நாகை பழைய பேருந்து நிலையத்திலிருந்து நாகை மாவட்ட கழக செயலாளர் என்.கௌதமன் தலைமையில் நினைவு தின அமைதி ஊர்வலம் நடைபெற்று நாகை துறைமுகம் அருகே உள்ள நினைவு ஸ்தூபியில் மலர் வளையம் வைத்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. உடன் முன்னாள் அமைச்சர் உ. மதிவாணன், கூட்டணி கட்சிகளை சேர்ந்த நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் நாகைமாலி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் க.இராஜேந்திரன், ப. கோவிந்தராஜன், மாவட்ட கழக பொருளாளர் மு லோகநாதன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன்,மாவட்ட துணை செயலாளர்கள் ஆரூர் மணிவண்ணன், கற்பகம்நீலமேகம், ஒன்றிய கழகச் செயலாளர்கள் கே. பழியப்பன், மகாகுமார், சிக்கல் என். ஆனந்த், ஆர்.டி.எஸ். சரவணன், சோ.பா. மலர்வண்ணன், உதயம் வே.முருகன், செல்வ. செங்குட்டுவன், நாகூர் நகரக் கழக செயலாளர் எம். ஆர்.செந்தில்குமார் தலைமை கழக வழக்கறிஞர் மு தினேஷ் குமார் மற்றும் பலர் உள்ளனர்.



மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 50 மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் .சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் .ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த், மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் தஎஸ். ராஜகுமார், மற்றும் கழக நிர்வாகிகள் குத்தாலம் க.அன்பழகன், பி.எம் ஸ்ரீதர், ஜி.என்.ரவி, இராம.இளங்கோவன், ப.முருகமணி, ஏ.ஜி.ஜெ. பிரபாகர், மங்கை எம்.சங்கர் மஞ்சு.குமார், எம்அப்துல் மாலிக் மூவலூர் எம்.மூர்த்தி, குண்டாமணி (எ) என். செல்வராஜ், ம.சுப்பராயன், பி.சிவதாஸ் மற்றும் பலர் உள்ளனர்